# திருக்குறள் காட்டும் மனித மாண்புகள்

*முனைவர் தே.ராஜசீலி, உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர்கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம்.

**முன்னுரை**

உலக மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ வழிகாட்டிய சிந்தனையாளர் திருவள்ளுவர். அன்னாரின் குறள், மனித குலம் எந்த இடத்தில் வாழ்ந்தாலும் எந்தச் சூழலில் வாழக்கை முறையை மேற்கொண்டிருந்தாலும் அங்கெல்லாம் ஒளியைப்பாய்ச்சி மனித வாழ்வு சிறக்க வழிகாட்டியாய் இருந்து வருகின்றது. இத்தகைய மேன்மை பொருந்திய இந்நூலில் 1330 குறட்பாக்களும் அறம், பொருள், இன்பம் என முப்பாலிலும் பிரித்த முறையை 380, 700, 250, குறட்பாக்களாக பகுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையில் கொள்ளுவன-தள்ளுவன எவை எவை எனப் பகுத்துக்காட்டிய வள்ளுவப் பெருந்தகை தன்னுடைய குறளில் மனிதம் குறித்து தெளிவுப்படுத்தி உள்ளார். அவைகளை ஆய்வது இக்கட்டுரையாகும்.

**மனிதம்**

மனிதப் பிறவி அதிசயப்பிறவி மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டிய பிறவி. இப்பிறவி சிறக்க மனிதன் அன்பு நெறியினைக் கடைப்பிடித்தல் அவசியம். ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஆம் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் வாக்கு மாறி மனிதப்பண்பு சீரழிந்து வருகின்றது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றிருந்த நிலைமாறி சாதி மதம் மொழி இனம் மற்றும் சமயத்தின் பெயரினால் அன்றாடம் நாமும் நம் நாடும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

இதற்கான காரணங்களை ஆராய்ந்து நோக்கின் இன்றைய நம் மக்களிடம் அன்பு கருணை இரக்கம் பொறுமை நட்பு போன்ற அரும் பெருங்குணங்கள் மறைந்து வருவதே ஆகும். எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓரினமென வாழ்ந்த மக்கள் இன்று தண்ணீருக்குக் கூட சண்டையிட்டுக் கொள்கின்றோம். மேலும் மதத்தின் பெயரால் பிரிவினையை ஏற்படுத்தி மனித மாண்பினை சாகடித்துக் கொண்டிருக்கிறோம். மனித மனங்கள் ஒன்றினால் மதத்திற்கு வேலையில்லை என்பதை மறந்து விட்டோம்.

**வள்ளுவர் உரைக்கும் மனிதம்**

மனித மாண்புகளை வளப்படுத்தி மனித நேயத்தைப் பெருக்க பல்விதமான அறக்கருத்துக்களை கட்டமைத்துள்ளார் வள்ளுவர். உலகின் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்பவன் வானில் வாழும் தெய்வத்திற்கு நிகராகக் கருதப்படுவான் என மனிதத்தை உயர்த்திக் காட்டுகின்றார்.

**அன்பு**

செந்நாப்புலவர் மனிதப்பண்பினை வளர்க்கும் முதற்கருவியாக விளங்குவது அன்பு என அறிதியிட்டு உரைக்கிறார்.

*அன்பிற்கு உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்*
*புன் கண்நீர் பூசல் தரும்.*

எனும் குறளில் மனித அன்பின் உச்சகட்ட வெளிப்பாடு கண்ணீர் மனிதனுக்கு அன்பு மிகுந்தால் கண்ணீராகப் பெருக்கெடுக்கும். கட்டுப்படுத்த முடியாதது அன்புடையாரின் சிறு கண்ணீரே அவர் அன்பினைப் பலர் அறிய வெளிப்படுத்தி விடும். அதேபோல் அன்பின் மகத்துவத்தை மேலும் அதிகப்படுத்த விரும்பிய பெருந்தகை அன்பின்வழியது உயிர்நிலை என்கிறார். உயிர்நிலைகளின் செயல்பாடுகள் அனைத்துமே அன்பின் வழியாக அமைந்ததே. எனவே அன்பு எனும் மாபெரும் சக்தியின் மூலம் மனிதம் திழைக்கும் என்கிறார்.

**பொறுமை**

மனித மாண்பின் எதிரியாகத் திகழ்வது கோபம் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமைக்கான காரணம் 'பொறுமையின்மையை' ஆகும். பொறுமையின் தன்மை குறித்து இங்ஙனம் உரைக்கின்றார்.



Scanned by CamScanner

*"அகழ்வாரைத் தாங்கம் நிலம் போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை*

தன்னைத் தோண்டி காயப்படுத்துபவனையும் நிலம் தாங்குகின்றது. அதுபோல ஒருவன் உன்னை இகழ்ந்தாலும் பொறுத்தலே மனிதமாகும் இதே கருத்தினை.

*"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்*

எனும் குறளின் மூலம் வலியுறுத்துகின்றார்.

**ஒற்றுமை**

மனிதம் சிறக்க ஒற்றுமையுணர்வு மிக அவசியமாகின்றது. இன்று இப்பண்பு இல்லாத காரணத்தினாலேயே நாம் அனைத்து வகையிலும் பிரிவினையைச் சந்தித்து வருகின்றோம். இதனைத் தெய்வமொழிப்புலவர் உணர்த்த விரும்பிய நிலையில்

*காக்கை கரவா கரைந்து உண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள*

காக்கையானது உணவைக் கண்டதும் மறைக்காமல் தன் இனத்தைக் கூவி அழைத்து உடனிருந்தே உண்ணும் அதுபோலவே மனிதனும் தன் சுற்றத்தாரிடமும் உலகத்தாரிடமும் ஒற்றுமை உணர்வைப் பெருக்க வேண்டும்.

**நட்பு**

எங்கு காணினும் சண்டை சச்சரவுகள்தான். வெடிகுண்டு கலாச்சாரம் இன்று மலிந்து விட்டது. இதற்கு அதிகப் படியான காரணியாக விளங்குவது நட்பின்மையேயாகும். நம் மக்கள் நட்பு எனும் வார்த்தையைக் கூட மறந்த நிலையினில் உள்ளோம். இதை மாற்றும் முயற்சியாக வள்ளுவர் இவ்விதம் கூறுகின்றார்.

*செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்*
*வினைக்குஅரிய யாவுள காப்பு*

நட்பைப்போல் ஒருவன் செய்து கொள்வதற்கு அருமையான செயல் எதுவுமே இல்லை நட்பின் மூலம் மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என மொழிகிறார். நட்பு கூடினால் மனிதம் தானாகவே வளரும் என உரைக்கின்றார் வள்ளுவர்.

மனிதனை மனிதனோடு பிற உயிர்களோடு பிணைத்துவைப்பது இரக்கப் பண்பேயாகும். மனித வாழ்க்கையின் உயிர்நாடியாக விளங்குவதும் இதுவேயாகும். பிறருக்காக வாழும் வாழ்க்கையை இன்பமானது. பிறருக்கு ஏற்படும் துன்பம் தனக்கு நிகழ்ந்தது போல துடிப்பதே இரக்கமாகும். இதனையே

*அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதன் நோய்*
*தம்நோய் போல் போற்றாக் கடை*

பிற உயிரினங்கள் படும் துன்பத்தைத் தன் துன்பம்போல் நினைத்து வருந்தினாலே பிற உயிர்களை . நாம் வருத்தம் அடைய விடமாட்டோம் என இரக்கப்பண்பு குறித்து விவரிக்கிறார் வள்ளுவர்.

**முடிவாக**

*"பாரத நாடு பழம் பெரும் நாடு"*

நீரதன் புலவர் இந்நினைவகற்றாதீ என நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தங்களுக்குள் சாதி மத இன பேதமின்றி தேசிய உணர்வுடன் வாழவேண்டும். பகைமையை வேரறுக்க வேண்டும். **"அன்பே சினம்"** எனும் கோட்பாட்டினைக் கடைப்பிடிக்க வேண்டும். **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** எனும் உயிர் பண்பின்படி ஒழுக வேண்டும். நட்பினை வாழ்வின் பற்றுக் கோடாக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஆசை, சினம் கடும்பற்று முறையற்ற பால் வளர்ச்சி, உயர்வு, தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய உணர்ச்சிகளைக் களையெடுத்து தனிமனித ஒழுக்கத்தைப் போற்ற வேண்டும். வாழ்வியல் மதிப்புகளை மனிதத்தைக் தவறாமல் கடைபிடிக்கும் மக்களைக் கொண்ட சமுதாயமே அமைதியோடு இருக்கும்.



Scanned by CamScanner